# <u>ஓடி விளையாடு பாப்பா . . . . . .</u>

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று, குற்றங்களை மறந்துவிடும் மனசால் ஒன்று" என்று வாயளவில் வாழ்த்துகிறோம். ஆனால் செயலளவில் குழந்தைகளை வதைக்கிறோம். பெரியவர்க குழந்தைகளை துன்புறுத்துதல் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. சென்னையில் தந்தையே மனைவியுடன் உள்ள கருத்து வேறுபாடு காரணமாக அவள் பெற்ற தன் மகனை அடைத்து வைத்து சித்திரவதை செய்வதை அக்கம்பக்கத்தவரது தகவலால் மாநகர போலிசார் தலையிட்டு குழந்தையை மீட்டுள்ளனர். கொடூர தந்தை மீது கொலைமுயற்சி வழக்குப் போடப்பட்டுள்ளது. எவ்வாறு இளம் பிஞ்சுகளை அதுவும் தன் குழந்தையை உடல்ரீதியாக சித்திரவதை செய்ய மனம் வருகிறது. என்பது உளவியல் முறையில் ஆராய்ச்சிக்குரியது. இத்தகைய கல்நெஞ்சக்காரர்கள் 'உறுப்பொத்தல் மக்களொப்பு ' என்ற அளவில் மனிதர்கள் என்ற போர்வையில் மிருகங்களாக திரிகிறார்களே என்று மனம் பதப்பதைக்கிறது.

குழந்தைகள் முறைகேடாக நடத்தப்படுவது பற்றிய விழிப்புணர்வு மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் மிகக் குறைவு. குழந்தைகளை வேலையில் அமர்த்தக்கூடாது என்று சட்ட்ம் இருக்கிறது. ஆயினும், குழந்தைத் தொழிலாளிகள் பரவலாக பணியில் இருக்கிறார்கள். கண்ணாடி, வெடிமருந்து, நச்சுப் பொருட்கள், ரசாயானம் போன்ற அபாயகரமான பொருட்களை வைத்து நடத்தப்படும்

தொழிற்கூடங்களிலும் குழந்தைகள் வேலை செய்கிறார்கள். `பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் கால்பந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் குழந்தைகள் பணிபுரிகிறார்கள் என்பதால் அங்கு தயாரிக்கப்படும் கால்பந்துகளை புறக்கணிக்கிறோம் என்று சர்வதேச கால்பந்துக்குழு சில வருடங்களுக்கு முன்னால் அறிவித்தது.

1989ம் வருடம் ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகள் நலனுக்கான கூட்டு ஒப்பந்தம் நிறைவேற்றியது. 54 பிரிவுகளைக் கொண்ட இத்தீர்மானத்தை இந்தியா உட்பட பல நாடுகள் அங்கீகரித்துள்ளது. இதன் அடிப்படையில்தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் எவை குற்றங்களில் ஈடுபடும் குழந்தைகளை குற்றவாளிகளாகப் பார்க்கக்கூடாது, பாதிப்பிற்கு உள்ளானவர்களாக கருதவேண்டும் என்ற வகையில் உலகநாடுகள் குழந்தைகள் நலனுக்காக சட்டங்கள் இயற்றியுள்ளன. இந்தியாவில் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2000 கொண்டுவரப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய உடன்படிக்கையில் முக்கியமான அம்சங்களாவன;

- பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களை குழந்தைகளாகக் கருதவேண்டும். குடியுரிமை, பெயர் சொல்வதற்கான உரிமை, இலவச கட்டாய ஆரம்பக்கல்வி, குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, குழந்தைகளை கொடுமைப்படுத்துவது, கட்டயாயக் கடத்தல் மீது கடும் நடவடிக்கை எடுத்தல்.

- குழந்தைகளை எந்தவிதத்திலும் மனம் மற்றும் உடல்ரீதியாக கொடுமைக்கு உள்ளாக்கக்கூடாது.

- குந்தைகளை இனம், ஜாதி, நிறம், மதம், பொருளாதார நிலை போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்யாதல்.
- குழந்தைகளை பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை.

பாதுகாப்பு நடவடிக்கைகளும், சட்டங்களும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் பல நடத்தப்பட்டாலும், குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்கின்றன. குழந்தைகளைப் பிச்சைத் தொழிலில் ஈடுபடுத்துவது, பள்ளிக்கு அனுப்பாமல் தொழிலில் ஈடுபடசெய்வது, வீட்டில் வேலைக்கு வைப்பது மட்டுமல்லாமல் அவர்களை அடித்து வேலை வாங்குவது போன்ற அவலங்கள் எங்கும் உள்ளன. நகரில் வசிக்கும் பலர் வீட்டு வேலைக்கு தனது ஊரிலிருந்து ஏழைக்குழந்தைகளை அழைத்துவந்து ஏதோ அவர்களுக்கு உதவுவதுபோல் தனது வீட்டில் வேலைக்கு வைக்கிறார்கள் ஏழைக்குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்றால் அவர்களை படிக்க வைக்கவேண்டும். அவர்களது ஏழ்மைநிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்துவது சுரண்டிப் பிழைப்பதைத் தவிர வேறென்ன?

சமுதாயத்தில் எவ்வாறு குழந்தைகள் நடத்தப்படுகிறார்கள், எத்தகைய தீங்குகள் இழைக்கப்படுகின்றன என்பதைப் பற்றி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சில ஆய்வு நடத்தின. குழந்தைகளைச் சீண்டுதல், பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையில் சில்மிஷம் செய்வது போன்ற அவலங்கள் குழந்தைகளின்

உற்றார் உறவினர்களாலேயே இழைக்கப்படுகிறது என்று தெரியவந்துள்ளது. இத்தகைய கொடுஞ்செயல்களை எவ்வாறு கையாளவது என்பதறியாமல் குழந்தைகள் மனதளவில் நோகமுற்று மருகுகின்றனர். எதற்கெடுத்தாலும் குழந்தைகளைத் திட்டுவது, அடிப்பது, மற்றவர்களோடு ஒப்பிட்டு குறைசொல்வது, அவர்களுக்கு விருப்பமானவற்றை மறுத்தல், தனி அறையில் வைத்து பூட்டுதல் போன்ற அநீதிகள் சாதாரணமாக பல இல்லங்களில் நடக்கின்றன.

அடிஉதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்றே ஏதோ ஒரு புண்ணியவான் சொன்னதை தவறாக புரிந்து நாம் செய்யும் கொடுமைகளை குழந்தை நலனுக்காக என்று நியாயப்படுத்திக் கொள்கிறோம். இதனால் மனநிலை பாதிக்கப்படும் குழந்தைகள் பலர். அவர்களுடைய முழுமையான திறன் வெளிவருவதில்லை. மற்றவர்களிடம் பேசுவதற்கு அஞ்சுதல், தாழ்வு மனப்பான்மை, முழுமையான சுய ஆளுமை பாதிப்பு, தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு விரக்தியுறுதல் போன்ற பல எதிர்மறை விளைவுகள், பெரியோர்களின் செயல்களால் உண்டாகின்றன. இவ்வாறு பாதிக்கப்படும் குழந்தைகள் தான் பிற்காலத்தில் குற்றம் புரிபவர்களாக வளர்கின்றனர்.

பள்ளிகளில் ‘கார்போரல் தண்டனை’ என்று மாணவர்களை அடித்து திருத்துதல் முறை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூறினாலும் மாணவ மாணவியர்களை கொடுமைப்படுத்துவது பற்றி செய்திகள்

வந்துகொண்டுதானிருக்கின்றன. குஜராத் மாநிலத்தில் ‘பால்மிகி’ வகுப்பைச் சேர்ந்த துப்புரவு தொழிலாளர்களின் குழந்தைகள் எவ்வாறு தமது பள்ளிக்கூடங்களில் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்பது பற்றி ஒரு கருத்தரங்கில் பகிர்ந்துகொண்டனர். சகமாணவர்கள் தம்மை தொடுவதில்லை என்றும் , தொட்டாலும் வாயினால் ஊதி சுயசுத்தி செய்கிறார்கள் என்றும், ஆசிரியர்கள் தங்களது நோட்டுப் புத்தகங்களை திருத்துவதில்லை என்று கூறியுள்ளனர். மேலும் பள்ளியில் இருக்கும் கழிவறை சுத்தம் செய்யும் பணி, மற்ற இடங்களை சுத்தம் செய்வது போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பது வேதனைக்குரியது. காந்தி பிறந்த மண்ணில் இந்த அவலநிலை.

மேற்குவங்காளத்தில் மித்னாபூர் என்ற கிராமத்தில் பாபர் அலி என்ற 10ம் வகுப்பு பயிலும் மாணவன் எவ்வாறு தனது சுயமுயற்சியால் தனது கிராமத்தில் அக்கம் பக்கத்து வசதியில்லாக் குழந்தைகளுக்கு தான் கற்றதை பகிர்ந்துகொள்கிறான் என்பது நெகிழ வைக்கும் செய்தி. அந்த கிராமத்திலிருந்து அரசுபள்ளிக்கூடம் சுமார் 5 கி.மீ தொலையில் உள்ளது. அங்குள்ள குழந்தைகள் வயிற்றைக் கழுவ வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம். பாபர்அலி தொலைவில் உள்ள பள்ளிக்குச் சென்று படித்து திரும்பி வந்த கையோடு சிரமத்தைப்பாரமல் கிராமத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்கு தினப்பாடம் சொல்லிக்கொடுக்கிறான். இவனது தன்னலமற்றச் செயலால் பள்ளிக்குச் செல்லமுடியாத குழந்தைகள் இவனது வீட்டைச்

சுற்றி உட்கார்ந்து பயில்கின்றனர். மிக இளமையான தலைமையாசியர் என்ற சிறப்பு 16 வயதான பாபர் அலிக்கு உண்டு.  அந்த சிறுவனுக்கு உள்ள சமுதாய உணர்வு எவ்வளவு பேருக்கு வருகிறது.

இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் விசேஷ சட்டங்களில் குழந்தைகளுக்கு எதிராக பல குற்றங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. கட்டாய கருக்கலைப்பு, சிசுக்கொலை, தற்கொலைக்கு தூண்டுதல், குழந்தைகளை பரிதவிக்க விடுதல், குழந்தை கடத்தல், குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல், கற்பழிப்பு, இயற்கைக்கு மாறாக புணர்தல், குழந்தை விவாகம், குழந்தைகளை வேலையில் அமர்த்துதல் போன்ற பல குற்றங்கள் இதில் அடங்கும்.

இந்தியாவில் 42 சதவிகித ஜனத்தொகையினர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். இது உலகில் உள்ள குழந்தைகளின் ஜனத்தொகையில் 20 சதவிகிதமாகும். இவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைத்துக் கொடுக்க வேண்டியது நமது கடமை. தில்லிக்கு அருகில் இந்த வருடம் நிகழ்ந்த நித்தாரி தொடர் கொலை குழந்தைகளின் உடல் உறுப்பு அறுவடைக்காக செய்யப்பட்டது போன்ற கொடுஞ்செயல் மீண்டும் நிகழக்கூடாது. குழந்தைகளைக் கடத்தி இழிவணிகமுறை பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. தொழிலில் ஈடுபடுத்துவதற்காக 'குழந்தைகள் வணிகம்' சட்டத்திற்கு விரோதமாக செயல்படுவது இந்தியாவில் அதிகமாகியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நலப்பிரிவு கவலை தெரிவித்துள்ளது.  சுமார் 4 இலட்சம்

குழந்தைகள் பருத்தி ஆலைகளில் பணிபுரிகின்றனர். குஜராத்தில் சூரத் நகரம் வைரம் அறுக்கும் தொழில்களுக்கு உறைவிடம். ஆனால் இந்த அபாயகரமான தொழிலில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று பல குழந்தைகள் நல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குற்றம் சாட்டுகின்றன

.

முக்கிய நகரங்களில் ஆண்டிற்கு சுமார் 1000 குழந்தைகள் காணாமல் போகின்றனர். தங்கச் சங்கிலி பறிபோனாலோ, பொருள் திருடப்பட்டாலோ மக்கள் கூக்குரலிடுகின்றனர். ஆனால் குழந்தைகள் காணாமல் போவதைப் பற்றி பேசுவதில்லை. காவல் நிலையங்களிலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வானொலி, தொலைக்காட்சியில் காணாமல் போனவர்களைப் பற்றி தகவல் கொடுப்பதோடு முடித்துவிடுகின்றனர். சென்னை உயர்நீதிமன்றம் குழந்தைகள் காணாமல்போன வழக்குகளை குற்றப் புலனாய்வுத்துறை பிரத்யேகமாக கவனித்து காணாமல்போன குழந்தைகளை கண்டுபிடிக்க முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணித்துள்ளது. தமிழ்நாட்டில் 2008 வருடம் 117 குழந்தைகளும், இந்த வருட இதுவரை 75 குழந்தைகளும் காணாமல் போய் உள்ளனர்.

குழந்தைகள் உதவி மையங்கள் முக்கிய நகரங்களில் இயங்குகின்றன. உதவிக்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 1098. குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிபற்றி தன்னார்வு தொண்டு

நிறுவனங்களும் புகார் கொடுக்கலாம், காவல்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற விதி இருக்கிறது. சென்னை நகரில் குழந்தைகள் நட்பக காவல்நிலையம் அமைக்க திட்டம் இருந்தது. இத்தகைய காவல் நிலையங்கள் முக்கிய நகரங்களில் அமைக்கப்படவேண்டும்.

ஓடிவிளையாடு பாப்பா என்று சொல்வது போய் குழந்தைகளை ஓட ஓட விரட்டுகின்றோம். ‘பிள்ளை பிராயத்தை இழந்தோமே’ என்று ஒவ்வொருவரும் ஏங்கும் நாள் உண்டு. அந்தப் பிள்ளை பிராயத்தை குழந்தைகளிடமிருந்து பிடுங்காமல் அவர்களிடமே கொடுப்போம். குழந்தைகளைப் போற்றும் நாடு தான் வளம் பெறும் என்பதை மறந்து விடக்கூடாது.

**(ஆர்.நடராஜ்,இ.கா.ப.,)**
தலைமை இயக்குனர்/இயக்குனர்
தீயணைப்பு மீட்பு பணிகள் துறை,
தமிழ்நாடு.